## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

## (கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு)

**பதவி : மேலதிக பணிப்பாளர் நாயகம் 01 (கல்வி)**

1. **வயதெல்லை** : விண்ணப்பதாரர் 25 வயதுக்குக் குறையாதவராகவும், 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(தற்போது அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க நியாயாதிக்க சபைகள் / நிறுவனங்களில் சேவையாற்றுபவர்களுக்கு இந்த அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.)

2. **கல்வித் தகைமை** : **வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் சமூக விஞ்ஞானத் துறையில் முதற் பட்டம் பெற்றிருப்பதுடன், சமூகப்பணி (Social Work) தொடர்பான முதுமானிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அனுபவம்**

அரசாங்கம் அல்லது அரசாங்க நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவைப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். (மேற்குறிப்பிட்ட சேவைக் காலத்தில் குறைந்தபட்சம் 3 வருடங்கள் சமூகப்பணி (Social Work) தொடர்பான முதுகலைப் பட்டம் பெற்றதன் பின்னரான காலமாக இருத்தல் வேண்டும்.)

**மேலதிக தொழில்சார் தகைமைகள்**

சமூக சேவை / சமூக நலன்புரி / சமூக அபிவிருத்தித் துறைகளில் நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவ அனுபவம் பெற்றிருத்தல் மற்றும் சமூகப்பணி தொடர்பான தொழில்சார் அமைப்பொன்றின் (Professional Body) உறுப்புரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் தகைமைகள்**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவைப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சமூக சேவை / சமூக நலன்புரி / சமூக அபிவிருத்தித் துறைகளில் நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவ அனுபவம் பெற்றிருத்தல் மற்றும் சமூகப்பணி தொடர்பான தொழில்சார் அமைப்பொன்றின் (Professional Body) உறுப்புரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. **நேர்காணலில் புள்ளிகள் வழங்கப்படும் முறை**

| | |
|---|---|
| தொடர்புடைய நிருவாக தொழில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| தொடர்புடைய மேலதிக தொழில்சார் தகைமைகள் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தப்படும் திறமை | 25 புள்ளிகள் |
| **மொத்தம்** | **100** |

**சம்பள அளவுத்திட்டம்**

HM 2-1 2025 ரூபா 161,140 – 12 x 4,850 – ரூபா 219,340.00 (2027.01.01 ஆம் திகதியிலிருந்து இச்சம்பளம் உரித்துடையது.)

(2026, திசெம்பர் மாதம் வரை அடிப்படைச் சம்பளம் ரூபா 140,317.00)

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

இவற்றுக்கு மேலதிகமாக தொழில்வாண்மைக்கான கொடுப்பனவுகள், ஆய்வுக் கொடுப்பனவுகள் மற்றும் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தின் சுற்றறிக்கையினூடாக வழங்கப்படும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**பதவி** : சிரேஷ்ட விரிவுரையாளர் - 03 (சிங்கள மொழிமூலம் 02, தமிழ் மொழிமூலம் 01)

3. **வயதெல்லை** : விண்ணப்பதாரர் 30 வயதுக்குக் குறையாதவராகவும், 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பெல்லை பொருந்தாது.)

4. **கல்வித் தகைமை** : **வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** (கீழே குறிப்பிடப்பட்டுள்ள 1 அல்லது 2 இல் ஏதேனும் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.)

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/சமூக விஞ்ஞானத் துறையில் பெற்ற சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல்.

அத்துடன்

சமூகப்பணி/சமூக விஞ்ஞானம் தொடர்பான பட்டப்பின் படிப்பு ஒன்றை (ஆய்வுடன்) பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

முதற் பட்டம் பெற்றதன் பின்னர், அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் எட்டு (08) வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/சமூக விஞ்ஞானத் துறையில் பெற்ற சிறப்புப் பட்டம்

அத்துடன்

சமூகப்பணி/சமூக விஞ்ஞானம் தொடர்பான கலாநிதிப் பட்டம் (PhD) ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

முதற் பட்டம் பெற்றதன் பின்னர், அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

உள்ளக விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் (கீழே குறிப்பிடப்பட்டுள்ள 1, 2 அல்லது 3 இல் ஏதேனும் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.)

(1) மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/ சமூக விஞ்ஞானத் துறையில் சிறப்புப் பட்டம் / பொதுப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

சமூகப்பணி/சமூக விஞ்ஞானத் துறையில் ஆய்வின் மூலம் பெற்ற முதுகலைப் பட்டம் (Master's Degree) பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும்

"கல்வி / ஆய்வு" சேவைப் பிரிவின் (AR-1) கீழ் விரிவுரையாளர் பதவியில் குறைந்தபட்சம் எட்டு (08) வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

(3) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/ சமூக விஞ்ஞானத் துறையில் சிறப்புப் பட்டம் / பொதுப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

சமூகப்பணி/சமூக விஞ்ஞானத் துறையில் கலாநிதிப் பட்டம் (PhD) பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும்

"கல்வி/ஆய்வு" சேவைப் பிரிவின் (AR-1) கீழ் விரிவுரையாளர் பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் முறை**

| | *அளவுகோல்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| 1. | கல்வித் தகைமைகள் (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக) | 30 புள்ளிகள் |
| | i. வகுப்புச் சித்திகள் | |
| | ii. பட்டப்பின் படிப்பு (ஆய்வுடனான) | |
| | iii. பட்டப்பின் படிப்பு (ஆய்வு அல்லாத) | |
| 2. | கற்பித்தல் அனுபவம் (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனத்தில் கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல்.) | 10 புள்ளிகள் |
| 3. | ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் | 20 புள்ளிகள் |
| | i. ஆய்வுக் கட்டுரைகள்/ஆய்வு நூல்கள் – சுயாதீனமானவை (non refereed) | |
| | ii. மாநாட்டு அறிக்கைகள்/ஆய்வு அறிக்கைகள் | |
| | iii. சுயாதீன வெளியீடுகள் | |
| | iv. வெளியிடப்பட்ட கல்விசார்/ஆய்வுசார் கட்டுரைகள் – தேசிய/சர்வதேச | |
| 4. | மேலதிக செயற்பாடுகள் | 10 புள்ளிகள் |
| | i. விளையாட்டு | |
| | ii. சமூகசேவை/சங்கங்கள், அமைப்புகள்/சமுதாய நிகழ்ச்சிகள் | |
| 5. | ஆளுமை | 15 புள்ளிகள் |
| 6. | தொடர்புடைய துறை பற்றிய பொது அறிவு | 15 புள்ளிகள் |
| | மொத்தம் | **100 புள்ளிகள்** |
| | * குறிப்பு: சமமான தகைமைகள்/சமமான பங்களிப்புகளுக்கு மேற்குறிப்பிட்ட புள்ளிகளில் 50% மட்டுமே வழங்கப்படும். | |

4. **சம்பள அளவுத்திட்டம்**

AR – 2 2025 ரூபா 133,220.00 – 10 x 3600 = ரூபா 169,220.00 (2027.01.01 ஆம் திகதியிலிருந்து இச்சம்பளம் உரித்துடையது.)

(2026, திசெம்பர் மாதம் வரை அடிப்படைச் சம்பளம் ரூபா 116,763.00 )

இவற்றுக்கு மேலதிகமாக தொழில்வாண்மைக்கான கொடுப்பனவுகள், ஆய்வுக் கொடுப்பனவுகள் மற்றும் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தின் சுற்றறிக்கையினூடாக வழங்கப்படும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**பதவி** : விரிவுரையாளர் II - 06 (சிங்கள மொழிமூலம் 04, தமிழ் மொழிமூலம் 02)

3. **வயதெல்லை** : விண்ணப்பதாரர் 22 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பெல்லை பொருந்தாது.)

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

4. **கல்வித் தகைமை** : **வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

(கீழே குறிப்பிடப்பட்டுள்ள 1 அல்லது 2 இல் ஏதேனும் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.)

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/சமூக விஞ்ஞானத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல்.

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/சமூக விஞ்ஞானம் தொடர்பான இளமானிப் பட்டம் ஒன்றை பெற்றிருப்பதுடன் குறித்த துறையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

01. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் முறை

| | *அளவுகோல்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| 1. | கல்வித் தகைமைகள் (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக) | 30 புள்ளிகள் |
| | i. வகுப்புச் சித்திகள் | |
| | ii. பட்டப் பின் படிப்பு (ஆய்வுடனான) | |
| | iii. பட்டப் பின் படிப்பு (ஆய்வு அல்லாத) | |
| 2. | கற்பித்தல் அனுபவம் (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனத்தில் பெற்ற குறைந்தபட்ச கற்பித்தல் அனுபவம்) | 10 புள்ளிகள் |
| 3. | ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் | 20 புள்ளிகள் |
| | i. ஆய்வுக் கட்டுரைகள்/ஆய்வு நூல்கள் – சுயாதீனமானவை (non refereed) | |
| | ii. மாநாட்டு அறிக்கைகள்/ஆய்வு அறிக்கைகள் | |
| | iii. சுயாதீன வெளியீடுகள் | |
| | iv. வெளியிடப்பட்ட கல்விசார்/ஆய்வுசார் கட்டுரைகள் – தேசிய/சர்வதேச | |
| 4. | மேலதிக செயற்பாடுகள் | 10 புள்ளிகள் |
| | i. விளையாட்டு | |
| | ii. சமூக சேவை/சங்கங்கள், அமைப்புகள்/சமுதாய நிகழ்ச்சிகள் | |
| 5. | ஆளுமை | 15 புள்ளிகள் |
| 6. | தொடர்புடைய துறை பற்றிய பொது அறிவு | 15 புள்ளிகள் |
| | **மொத்தம்** | 100 புள்ளிகள் |
| | * **குறிப்பு**: சமமான தகைமைகள்/சமமான பங்களிப்புகளுக்கு மேற்குறிப்பிட்ட புள்ளிகளில் 50% மட்டுமே வழங்கப்படும். | |

4. **சம்பள அளவுத்திட்டம் :**

AR – 1 2025 ரூபா 91,650.00 – 10 x 2480-15x3450 = ரூபா 168,200.00 (2027.01.01 ஆம் திகதியிலிருந்து இச்சம்பளம் உரித்துடையது.)

2026, திசெம்பர் மாதம் வரை அடிப்படைச் சம்பளம் ரூபா 81,675.00

இவற்றுக்கு மேலதிகமாக தொழில்வாண்மைக்கான கொடுப்பனவுகள், ஆய்வுக் கொடுப்பனவுகள் மற்றும் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தின் சுற்றறிக்கையினூடாக வழங்கப்படும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**பதவி** : நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர் III - 01

1. **வயதெல்லை** : விண்ணப்பதாரர் 22 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பெல்லை பொருந்தாது.)

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

2. **கல்வித் தகைமை : வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப்பணி/மனிதவள முகாமைத்துவம் /அரசாங்க நிர்வாகம்/ அரசாங்க முகாமைத்துவம் / சமூக விஞ்ஞான துறையில் பட்டம் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரிகள் :**

(1) உள்ளக விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

(1) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் முறை

| *அளவுகோல்* | *புள்ளிகள்* |
|---|---|
| குறித்த துறையில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த துறையில் மேலதிக தகைமைகள் | 30 புள்ளிகள் |
| வேறு அடைவுகள்/திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலில் காட்டப்படும் திறன்கள் | 25 புள்ளிகள் |
| **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

4. **சம்பள அளவுத்திட்டம் :**

MA 3 2025 – ரூபா 53,940.00 – 10 x 800 – 11 x 1190 – 10 x 1320 – 5 x 1350 = ரூபா 94,980.00 (2027.01.01 ஆம் திகதியிலிருந்து இச்சம்பளம் உரித்துடையது.)

2026, திசெம்பர் மாதம் வரை அடிப்படைச் சம்பளம் ரூபா 49,831.00

பதவி : ஒலி-ஒளி தொழில்நுட்பவியலாளர் III – 01

3. **வயதெல்லை** : விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும், 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பெல்லை பொருந்தாது.)

4. **கல்வித் தகைமை : வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும், தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 05 அல்லது அதற்கு மேற்பட்ட ஒலி-ஒளி தொழில்நுட்பத் துறைக்கான தொழில்நுட்பத் திறமைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

உள்ளக விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் முறை

| | |
|---|---|
| தொடர்புடைய மேலதிக தொழில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| தொடர்புடைய மேலதிக கல்வி / தொழில்சார் தகைமைகள் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் மற்றும் செயல்திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தப்படும் திறமை | 25 புள்ளிகள் |
| **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

4. **சம்பள அளவுத்திட்டம் :**

MA 2-2 2025 – ரூபா 50,540.00 – 10 x 540 – 7 x 630 – 4 x 1080 – 20 x 1280 – ரூபா 90,270.00 (2027.01.01 ஆம் திகதியிலிருந்து இச்சம்பளம் உரித்துடையது.)

2026, திசெம்பர் மாதம் வரை அடிப்படைச் சம்பளம் ரூபா 46,960.00

5. பதவியில் நியமனம் செய்வதற்கான நிபந்தனைகள்

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்**

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கும், நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீதங்களுக்கு அமைவாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) பங்களிப்புகளை செலுத்த வேண்டும்.
4. மூன்று (03) வருட பரீட்சார்த்த காலத்திற்கு உட்பட்டிருத்தல்.

**சேவை நிபந்தனைகள்**

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**

நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் முறைக்கு அமைவாக, நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களில் இருந்து தகுதி வரிசையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

விண்ணப்பதாரர்கள் தமது முழுமையான சுயவிபரத் தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களை, கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2026.09.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில், பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பிக்கும் பதவி, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.

முழுமையற்ற, தெளிவற்ற அல்லது காலதாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் முறைகளினூடாக பட்டியல்படுத்தப்படும்

(அரசுத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.)

பணிப்பாளர் நாயகம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
லியனகேமுல்லை, சீதூவை,
2026, செத்தெம்பர் 11.

09-144

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED